ஒசூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி முதல்வரின் செயல்முறை ஆணைகள்
முன்னிலை: முனைவர்.சு.ஸ்ரீதரன். எம்.காம்.,எம்.'.பில்.,பி.எச்.டி., முதல்வர்
ந.க.எண். 346 /ஆ/2020 நாள். 07.09.2022

பொருள் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி ஒசூர்- தமிழ்நாடு அமைச்சுப்பணி- தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் 201-2019 மற்றும் 2019-2020ம் ஆண்டுகளுக்கான தொகுதி iv ன் கீழ் தெரிவு செய்து பணியமர்த்தப்பட்டு 01.09.2020 அன்று முதல் இளநிலை உதவியாளாராகப் பணிபுரிந்து வரும் திருமதி. பெ. தேவி என்பாருக்கு உரிய நிபந்தனையின் அடிப்படையில் 01.09.2020 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணை வழங்குதல் தொடர்பாக.

பார்வை. சென்னை-6. கல்லூரிக் கல்வி இயக்குநர் அவர்களின் செயல் முறை ஆணைகள் ந.க.எண்.16252/பி1/2020. நாள் 27.08.2020 மற்றும் உடன் பெறப்பட்ட சென்னை-3 தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய செயலரின் கடிதம் ந.க.எண். 2361/PSD I/2020 நாள்.29.05.2020.

2 .ஒசூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி முதல்வர்(பொறுப்பு) அவர்களின்செயல்முறைகள் ந.க.எண்.346/ஆ/2020 நாள். 01.09.2020.
3. அரசாணை எண்.191 பொதுத்துறை, நாள்.01.02.1962
4. சென்னை-6.கல்லூரிக் கல்வி இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண். 16252/பி1/2020 நாள். 07.09.2021.

---

பார்வை (1)ல் காணும் சென்னை-6. கல்லூரிக் கல்வி இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணைகள் மற்றும் உடன் பெறப்பட்ட தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய செயலரின் கடிதம் ஆகியவற்றின்படி 2018-2019 மற்றும் 2019-2020ம் ஆண்டுகளுக்கான தொகுதி **iv** ன் தேர்வில் தெரிவு செய்யப்பட்டு இளநிலை உதவியாளராகப் பணிபுரிய திருமதி பெ.தேவி என்பாரை இக்கல்லூரிக்கு நியமன ஒதுக்கீடு செய்து ஆணை வழங்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து பார்வை (2)ல் காணும் முதல்வரின் செயல்முறை ஆணையினை முன்னிலைப் படுத்தி இக்கல்லூரியின் இளநிலை உதவியாளர் காலிப்பணியிடத்தில் அன்னார் கடந்த 01.09.2020 அன்று முற்பகல் பணியில் சேர்ந்தார். இதன் பொருட்டு பார்வை (4)ல் காணும் சென்னை -6 கல்லூரிக் கல்வி இயக்குநர் அவர்களின் கடிதத்தின் படி அன்னார் பணியில் சேர்ந்த நாளான **01.09.2020 முற்பகல்** முதல் கீழ்க்கண்ட நிபந்தனையின் அடிப்படையில் அன்னாரின் பணியினை இளநிலை உதவியாளர் பணி நிலையில் **பணிவரன் முறை** செய்து ஆணை வழங்கப்படுகிறது.

**நிபந்தனைகள்**

**"இப்பணிவரன்முறை தொகுதி IV ல் 2018-2019 மற்றும் 2019-2020 பணி நியமனம் தொடர்பாக சென்னை உயர்நீதி மன்றம் மற்றும் சென்னை உயர்நீதி மன்ற மதுரைக் கிளையில் உள்ள வழக்குகளில் வழங்கப்படவுள்ள இறுதி தீர்ப்பாணைக்குட்பட்டது."**

07/09/2022

**முதல்வர்**
**அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி**
**ஒசூர் – 635 110**
கிருஷ்ணகிரி–மாவட்டம்

பெறுநர்
திருமதி.பெ.தேவி.
இளநிலை உதவியாளர்
அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, ஒசூர்

நகல்
1) சென்னை.6.கல்லூரிக் கல்வி இயக்குநர் அவர்களுக்கு பணிந்தனுப்பலாகிறது.
2) பணிப்பதிவேடு
3) உபரி நகல்கள்-3

07/09/2022